**சுருக்கம்**

பாசனம் – மேட்டூர் அணை – திருச்சி, அரியலூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்கள் – புள்ளம்பாடி மற்றும் புதிய கட்டளை மேட்டு வாய்க்கால் – பாசனம் – 16.9.2011 முதல் 137 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி(என்.1)துறை

அரசாணை (நிலை) எண்.170

நாள் 14.9.2011
திருவள்ளுவர் ஆண்டு 2042
ஆவணி 28

**படிக்கப்பட்டது:–**

1. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம் கடித எண்.210 அரசு/இ.பொ.2/ கோ.38 கால்வாய்/2011, நாள் 16.7.2011.
2. தலைவர், காவிரி தொழில்நுட்ப குழுமம் கடித எண்.சிடிசி 12/ /2003–54, நாள் 19.7.2011.
3. மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் கடித எண்.39123/2011/ஜி2, நாள் 6.8.2011.
4. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம் கடித எண்.இபொ2/2011/ கோ.38 கால்வாய், நாள் 2.9.2011.
5. மாவட்ட ஆட்சித்தலைவர், அரியலூர் கடித எண்.ஏ1/11530/2011, நாள் 10.9.2011.

0–0–0

**ஆணை:–**

மேலே படிக்கப்பட்ட நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டல தலைமைப் பொறியாளரது கருத்துருவினை, காவிரி தொழில்நுட்ப குழுமத் தலைவரின் பரிந்துரையின் அடிப்படையிலும், தஞ்சாவூர் மற்றும் அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர்களின் ஒத்திசைவின் அடிப்படையிலும் ஆய்வு செய்து, அதனை ஏற்று, மேட்டூர் அணையிலிருந்து, புள்ளம்பாடி மற்றும் புதிய கட்டளை மேட்டு வாய்க்கால்களின் 2011–2012 ஆம் ஆண்டு பாசனத்திற்காக 16.9.2011 முதல் 137 நாட்களுக்கு மட்டும் அணையின் நீர் இருப்பு மற்றும் நீர்வரத்து ஆகியவற்றினை கருத்திற்கொண்டு தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிடுகிறது.

2. மேட்டூர் அணையின் நீர் இருப்பு மற்றும் நீர்வரத்து ஆகியவற்றின் அடிப்படையில் நீரினை ஒழுங்குபடுத்தி, சிக்கனமாக தண்ணீர் திறந்துவிட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி நீர்வள ஆதாரத்துறை திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம். சாய் குமார்,
அரசு செயலாளர்.

பெறுநர்
முதன்மைத் தலைமைப்பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, சென்னை–5.
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம், திருச்சி–20.
மாவட்ட ஆட்சியர்கள் திருச்சி, அரியலூர் மற்றும் தஞ்சாவூர்.
தலைவர், காவிரி தொழில்நுட்ப குழுமம் மற்றும் பன்மாநில நதிநீர் பிரிவு, சென்னை–8.
**நகல்** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–9.
அமைச்சர் (பொதுப்பணி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ/உ.ந.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்